நெசவாளர்களுக்கு நிதி ஒதுக்கீடு

* 234 வினா—திரு. ஆர். டி. சீத்தாபதி: மாண்புமிகு ஆய்த்தீர்வை, கைத்தறி—நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நெசவாளர்களுக்கு வீடு கட்ட மற்றும் தொழில் துவங்க, தமிழக அரசுக்கு மத்திய அரசு, நிதி ஒதுக்கீடு ஏதும் செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: (அ) மற்றும் (இ) மைய அரசு ஜவுளிக் கொள்கையில் அறிவிப்பு செய்துள்ள "வீட்டுடன் கூடிய நெசவுக் கூடம்" கட்டும் திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திற்கு 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாண்டான கடந்த ஆண்டில் (1985-86) 500 "நகர்ப்புற வீட்டுடன் கூடிய நெசவுக் கூடங்கள்" கட்ட ஒப்புதலளித்தது. இத்திட்டத்தில் கட்டும் வீடொன்றுக்கு ரூ. 15,000 செலவாகும். இதற்கு மைய, மாநில அரசுகள் மான்யமாக ரூ. 2,500 வீதம் அளிக்கவேண்டும். அதன்படி, கடந்த நிதியாண்டில் (1985-86) 500 "நகர்ப்புற வீட்டுடன் கூடிய நெசவுக் கூடங்கள்" கட்டும் திட்டத்திற்கு சம பங்கு மான்யமாக தமிழக அரசு ரூ. 12.50 இலட்சம் வழங்கியுள்ளது. இதே போன்று, மைய அரசும் சம பங்கு மான்யமாக ரூ. 12.50 இலட்சம் வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. இத்தொகைக்கு மத்திய அரசின் விடுவிப்பு ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆர். டி. சீத்தாபதி: தலைவர் அவர்களே, நெசவாளர்கள் அதிக மான அளவில் தமிழ் நாட்டில்தான் இருக்கிறார்கள். எனவே இன்னும் அதிக நிதி மத்திய அரசிடம் கோருவதற்கு மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அதிக நிதியை ஒதுக்கும்படி மைய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 23-4-1986 ஆம் தேதிய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்ட வினாக்கள்.

வெல்லப்பாகு பற்றாக்குறை

* 177 வினா—திரு. சி. இராமலிங்கம் (திரு. அ. ப. சிவராமன் சார்பில்): மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி நெசவாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாராயம் தயாரிப்பதற்கு மூலப்பொருளான வெல்லப்பாகு (Molasses), பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது?